**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.341/2020**

பி.**வா.சா. 3–( ஜாகிர் உசேன், கிராம நிர்வாக அலுவலர்)**

**நாள். 17.09.2025.**

**பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

தற்போது நான் சுள்ளெறும்பு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அதன் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். சுள்ளெறும்பு கிராமம் சர்வே எண். 173/5 மற்றும் 173/6 ஆகிய இரண்டு சர்வே எண்களுக்குரிய சம்மந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். 173/5 ல் 4 உட்பிரிவுகள் ஆகியிருக்கின்றன. அவைகள் 2011ம் ஆண்டில் மேற்படி உட்பிரிவுகள் செய்யப்பட்டிருக்கிறது. 173/5A முத்துச்சாமி பெயரிலும் 173/5B முத்துச்சாமி பெயரிலும் , 173/5C லெட்சுமணன் பெயரிலும் 173/5D முத்தம்மாள் பெயரிலும் உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது. , மேலும் 173/5A என்பது 173/5A1 முத்துச்சாமி பெயரிலும் 173/5A2 பெருமாள் சாமி பெயரிலும் ஆகியிருக்கிறது. மேலும் 173/5D மலர்க்கொடி பெயருக்கு மாறியிருக்கிறது.

173/6 என்பது 2 உட்பிரிவுகள் ஆகியிருக்கிறது. 173/6 A முத்துச்சாமி கவுண்டர் பெயரிலும், 173/6 B சரஸ்வதி பெயரிலும் உட்பிரிவு ஆகியிருக்கிறது. மேற்படி உட்ரிவுகளை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். **அடங்கல் நீ.ம.சா.ஆ.1. ஆகும். அ பதிவேடு நீ.ம.சா.ஆ.2. ஆகும்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

173/5 மற்றும் 173/6 ஆகியவைகள் உட்பிரிவுகள் செய்வதற்கு முன்பாக முத்துச்சாமி கவுண்டர் பெயரில் இருந்தது. 1987ல் முத்துச்சாமி பெயரில் இருந்த சொத்துக்கள் தான் லெட்சுமணன், முத்தம்மாள், பெருமாள்சாமி, மலர்க்கொடி ஆகியோர்கள் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை– இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.17 08:47:22 +0530

Additional District and Sessions Judge,

Dinidgul.